# பதிப்புரை

மகாகவி பாரதியின் சிறுகதைக் களஞ்சியமே இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளது. இத்தொகுதியில் காணப்படும் பெரும்பாலான கதைகள் புதுவையில் இருந்த காலத்தில் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் ''காளிதாஸன்'' அல்லது ''சக்திதாஸன்'' என்னும் பெயர்களால் எழுதப்பட்டவையாகும்.

பெரும்பாலும் இக்கதைகளில் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் புதுவையில் நிகழ்ந்திருப்பதாலும், அநேகமாக ஒவ்வொரு கதையிலும் கவியின் சம்பந்தமிருப்பதாலும் பாரதியார் தனது சொந்த அனுபவங்கள், அபிப்பிராயங்கள், கனவுகள் முதலியவற்றை இக்கதைகள் மூலமாகத் தன்கு விளக்குவதை எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

கதையும் — பக்கமும்


| | | |
|---|---|---|
| 1. | வைசாக்தன் என்ற பண்டாரத்தின் கதை | ... 1 |
| 2. | சிறுகதை | ... 2 |
| 3. | சில வேடிக்கைக் கதைகள் | ... 2 |
| 4. | அந்தரடிச்சான் சாஹிப் கதை | ... 6 |
| 5. | கிளிக்கதை | ... 9 |
| 6. | இருள் | ... 12 |
| 7. | குதிரைக் கொம்பு | ... 15 |
| 8. | அர்ஜுன சந்தேகம் | ... 22 |
| 9. | தேவ விகடம் | ... 24 |
| 10. | அபயம் | ... 30 |
| 11. | காக்காய்ப் பார்லிமெண்ட் | ... 32 |
| 12. | பிழைத்தோம் | ... 36 |
| 13. | சும்மா | ... 39 |
| 14. | கலியுக கடோத்கசன் | ... 48 |

15. கத்திச் சண்டை ... 55
16. ''வளர்பிறை'' குழந்தைக் கதை ... 63
17. ''குழந்தைக் கதை'' ... 65
18. உஜ்ஜயினி ... 75
19. மிளகாய்ப் பழச் சாமியார் ... 76
20. பேய்க் கூட்டம் ... 79
21. ரெயில்வே ஸ்தானம் ... 90
22. சந்திரத் தீவு ... 103
23. ஸ்வர்ண குமாரி ... 111

காலத்திலே, ஸ்வர்ணகுமாரி தனது வீட்டு அடியிலே ஒரு பஞ்சணைமீது சாய்ந்துகொண்டு ''ஸத்தியா'' என்னும் தினசரிப் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தாள். அதில் திடீரென அவளது கண்களுக்குப் பின்வரும் குறிப்புத் தென்பட்டது.

''சாந்தபூர் வாசியாகிய ஸ்ரீயுத மனோரஞ்சன பானர்ஜீ நேற்று மாலை பிரம ஸமாஜத்தில் சேர்ந்துவிட்டார். இவர் மிகுந்த திறமையும், புகழுமுள்ள அதி வாலிபராதலால், இவர் ஹிந்து மார்க்கத்தினின்றும் பிரிந்துவிட்ட விஷயம் எங்கே பார்த்தாலும் பேச்சாய்க் கிடக்கிறது.''

மேற்கண்ட வரிகளைப் படித்தவுடனே ஸ்வர்ண குமாரிக்குப் புளகமுண்டாய்விட்டது. ஆனந்த பரவசத்திலே அமிழ்ந்து விட்டாள். உடனே மற்றோரிடத்தில் மனோரஞ்சனனுடைய பெயர் காணப்பட்டது. அதென்னவென்று பார்த்தாள். அதிலே,

''சென்ற சில தினங்களாக லோகமான்ய பால கங்காதர திலகர் பூனாவிலிருந்து நமது நகரத்திற்கு வந்து சுதேசீயம், ஸ்வராஜ்யம் என்ற பெரு விஷயங்களைப் பற்றிப் பதினாயிரக் கணக்கான ஜனங்களின் முன்பு உபந்நியாசங்கள் புரிந்து வருகின்றார். இவருக்கு நடக்கும் உபசாரங்களும் சிறப்புக்களும் முடியரசர்களுக்குக் கூட நடக்க மாட்டா. அப்படியிருக்க இவருடைய கோட்பாடுகளுக்கு விரோதமாக சில வாலிபர்கள், சாந்தபூர் ஸ்ரீ மனோரஞ்சன பானர்ஜியின் அக்ராசனத்தின் கீழ் ஒரு எதிர்க் கூட்டங்கூடி இந்நகரத்தின் ஏதோ ஒரு மூலையில் சில நிபந்தனைத் தீர்மானங்கள் செய்து கொண்டார்களென அறிந்து விசனமடைகிறோம்'' என இருந்தது.

இதைக் கண்டவுடனே ஸ்வர்ண குமாரிக்கு மனம் பதைத்து விட்டது. இவள் குழந்தை முதலாகவே ஸ்ரீ பாலகங்காதர திலகரைத் தெய்வம் போலக் கருதி வந்தாள். இவளுக்கு மனோரஞ்சனனிடமிருந்த அன்பைக் காட்டிலும், சுதேசத்தின் மீதுள்ள அன்பு பதினாயிரமடங்கு வன்மையுடையது. சுதேச